**பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.**

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 2வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்............................................................... மாவட்டம்.........................................................

கிராமம்............................................................ தந்தை /கணவர் பெயர்......................................

தாலுக்கா........................................................... தொழில்..................................................................

---

# IDOP No. 350/2023
# 16.04.2026

**ம.த.சா.2- திரு. வில்லியம் ஜேம்ஸ் த/பெ. இருதயசாமி**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் கடலூர் மாவட்டம், மேல்பட்டாம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவில் 3ஆம் தரப்பினர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 2. நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன்.

ஆண்டனி நிவேதா மற்றும் விஜயசில்வா ஆகியோருக்கு 19/06/2019 அன்று Xavier Jesus Christ Church-ல் திருமணம் செய்து வைத்தேன். நான் மேற்படி சர்ச்-ல் 30 வருடமாக போதகராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய ஆலயத்தில் வைத்திருந்த Marriage Register 2021 ல் ஏற்பட்ட மழையினால் சேதமடைந்து விட்டது. ஆகவே என்னால் Original Register ஐ எடுத்து வரமுடியவில்லை. என்னிடம் காட்டப்படும் திருமண சான்று என்னால் நடத்திவைக்கப்பட்டது. நான் தான் அதில் கையொப்பம் இட்டுள்ளேன். மேலும் என் முன்னிலையில் தான் ஆண்டனி நிவேதா மற்றும் விஜயசில்வா சான்றிதழில் உள்ள சாட்சிகளின் முன்னிலையில் கையொப்பமிட்டனர்.

1. Indian National Apostolic Diocese ல் வழங்கப்பட்ட திருமணம் நடத்தி வைப்பதற்கான அங்கீகார சான்றிதழின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.**

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்........................................................ மாவட்டம்........................................................

கிராமம்........................................................ தந்தை /கணவர் பெயர்......................................

தாலுக்கா........................................................ தொழில்........................................................

---

# IDOP No. 350/2023

# 16.04.2026

**ம.த.சா.1- திருமதி. ஆண்டனி நிவேதா த/பெ. மரிய டென்னிஸ் (எ) குமார்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை**

நான் சென்னை, குமணன்சாவடியில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. எங்களின் திருமணப் புகைப்படம் (1 எண்ணிக்கை) **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. கிறிஸ்தவ ஆலயத்தில் வழங்கப்பட்ட எங்களது திருமண பதிவுச்சான்றிதழ் சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.
Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge, Tiruvallur.